# வெள்ளி உரை

2023/10/27 م ١٢/٤/١٤٤٥هـ


கலாநிதி அஷ்ஷேய்க்

அப்துல் முஹ்ஸின் பின்
முஹம்மத் அல்காஸிம்

மஸ்ஜித் நபவிய்யின் கதீப் மற்றும் இமாம்


## தலைப்பு

## (தக்பீர்) அல்லாஹ்வைப் பெருமைப் படுத்துதல்

a-alqasim.com

## (தக்பீர்) அல்லாஹ்வைப் பெருமைப் படுத்துதல்*

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவனைப் புகழ்கின்றோம், அவனிடம் உதவிதேடுகின்றோம், மேலும் அவனிடம் பாவமண்ணிப்பும் தேடுகின்றோம். அல்லாஹ்விடம் எமது கெடுதிகளிலிருந்தும், எமது கெட்ட செயல்களிலிருந்தும் பாதுகாப்புத் தேடுகின்றோம். மேலும் அல்லாஹ் தனித்தவன், இணைதுணையற்றவன் என்றும், முஹம்மத் (ஸல்லல்லாஹு{ அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் அடியார் என்றும் சாட்சிபகர்கின்றேன் அல்லாஹ், அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் மீதும் அதிகமாக ஸலாத்தும் ஸலாமும் சொல்லியருள்வானாக.

---

*அல் மஸ்ஜிதுந்நபவியில் 12-04-1445 (27-10-2023)
அன்று நிகழ்த்தப்பட்ட ஜும்ஆ உரை

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ்வை உரியமுறையில் பயந்துகொள்ளுங்கள், இரகசிய மற்றும் பரகசிய நிலையிலும் அவனது கண்கானிப்பின் கீழ் இருங்கள்.

முஸ்லிம்களே,

அல்லாஹ்வின் பாலான அடிமைத்தனத்தின் யதார்த்தம், அவனுக்கு முழுமையாக கட்டுப்பட்டு, முழுமையாக விரும்புவதன் மூலமாகவே சாத்தியமாகும். அல்லாஹ்வின் பெயர்கள் மற்றும் பண்புகள் பற்றிய அறிவு, கலைகளின் அடிப்படையானதும் சிறப்புக்குரியதுமாகும். அவ்வருவின் மூலமாகவே அல்லாஹ் ஏகத்துவப் படுத்தப்பட்டு வணங்கப்படுகின்றான், உயிர்களுக்கு, அவற்றைப் படைத்தவனை பச்சை அறிய வேண்டிய தேவை மிகக் கடுமையாக உள்ளது. ஓர் அடியான் அவனது இறைவனின் பெயர்களையும் பண்புகளையும் அறிகின்ற அளவு அவன், அவனுக்கு கட்டுப்பட்டு, அவனை விரும்பி, கண்ணியப்படுத்துவான். ஒரு அடியான் அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் அறிகின்ற அளவு அவனது ஈமானும் அதிகரித்து உறுதி பெறும், ஓர் அடியான் தனது இறைவனுக்குக் கொடுக்கும் கௌரவத்தை, இறைவனும் அவனுக்குக் கொடுக்கின்றான்.

அல்லாஹ்வின் பெயர்கள் அனைத்தும் புகழுக்குரியவை, அல்லாஹ், அவை அனைத்தையும் (அழகானவை) என்று வர்ணிக்கின்றான்; ஏனெனில் அவை முழுமையைக் காட்டுகின்றது. (கபீர்) (பெரியவன்) என்பது அல்லாஹ்வின் திருநாமங்களில் ஒன்று, அவன் தன்னிலும் தனது பெயர்களிலும் பண்புகளிலும் பெரியவன், அவன் பெருமையைக் கொண்டும் கௌரவத்தைக் கொண்டும் வர்ணிக்கப்பட்டுள்ளான்.

அல்லாஹ், அனைத்தை விடவும் பெரியவன் என்பதை உறுதிப்படுத்துவது, அவனல்லாத வேறு எந்த படைப்புக்கும் இரட்சிக்கும் தன்மையில்லை என்றும், அவனைத் தவிர வேறு எவரும் வணக்கத்திற்கு தகுதியில்லை என்றும் ஆகிவிடுகின்றது.

﴿ذَٰلِكَ بِأَنَّ ٱللَّهَ هُوَ ٱلۡحَقُّ وَأَنَّ مَا يَدۡعُونَ مِن دُونِهِۦ ٱلۡبَٰطِلُ وَأَنَّ ٱللَّهَ هُوَ ٱلۡعَلِيُّ ٱلۡكَبِيرُ﴾

**22:62.** (இது (ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ்தான் உண்மை (இறைவன்); மற்றும் அவனையன்றி (வேறு) எதை அவர்கள் பிரார்த்திக்கிறார்களோ - அது பொய்யாகும்; இன்னும்: நிச்சயமாக அல்லாஹ் - அவனே உயர்ந்தவன், மிகவும் பெரியவன்.) என்று அல்லாஹ் கூறுகின்றான்.

படைப்பினங்கள் அளவிட முடியாதவை, அவை தொடர்பான அறிவு, யதார்த்தங்கள், மறைவானவை, கண்களுக்கு புலப்படக் கூடியவை என அனைத்தையும் அறிந்தவன் பெரியவனாகிய அல்லாஹ் மாத்திரமே.

﴿عَٰلِمُ ٱلۡغَيۡبِ وَٱلشَّهَٰدَةِ ٱلۡكَبِيرُ ٱلۡمُتَعَالِ﴾

13:9. (எல்லாவற்றின்) இரகசியத்தையும், பரகசியத்தையும் அவன் நன்கறிந்தவன்; அவன் மிகவும் பெரியவன்; மிகவும் உயர்ந்தவன்.) அல்லாஹ், (பேசுபவன்) என வர்ணிக்கப்பட்டுள்ளான், அவனது பேச்சு மகத்தானதும் கௌரவமானதுமாகும் என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது, " அல்லாஹ் வானத்தில் ஏதாவது ஒன்றை தீர்மானித்து விட்டால், வானவர்கள், அவனது கட்டளைக்கு கட்டுப்பட்டு சிறகுகளை அடிப்பார்கள், அது கல்லில் போடப்பட்ட சங்கிலியின் சத்தத்தை போன்றிருக்கும். உள்ளங்கள் தெளிவாகியதன் பின்: "உங்களுடைய இறைவன் என்ன கூறினான்" என்று கேட்பார்கள், அப்படிக் கேட்பவர்களுக்கு வானவர்கள்: "உண்மையை கூறினான், அவன் மிகப்பெரியவனாகவும் உயர்ந்தவனுமாக இருக்கின்றான்" என்று கூறுவார்கள். (புஹாரி)
எமது இறைவனுக்கே பெருமையும் கண்ணியமும் உரித்து, அவனே அவனது படைப்புக்களுக்குத் தீர்ப்பு வழங்குகின்றான், அவன் அவர்களுக்கு மத்தியில் நீதமானவனாகவும் இருக்கின்றான்.

﴿فَٱلۡحُكۡمُ لِلَّهِ ٱلۡعَلِيِّ ٱلۡكَبِيرِ﴾

40:12. ஆகவே இத்தீர்ப்பு மிக்க மேலானவனும், மகாப் பெரியவனுமான அல்லாஹ்வுக்கே உரியது.” என அல்லாஹ் கூறுகின்றான். அல்லாஹ் தனது அடியார்களை, அவனுக்கு இணைக்கப்படக்கூடிய குறைகளை

விட்டும் அவனைத் தூய்மைப்படுத்திப் பெருமைப்படுத்தும் படி கட்டளையிடுகின்றான்.

﴿وَقُلِ ٱلۡحَمۡدُ لِلَّهِ ٱلَّذِي لَمۡ يَتَّخِذۡ وَلَدٗا وَلَمۡ يَكُن لَّهُۥ شَرِيكٞ فِي ٱلۡمُلۡكِ وَلَمۡ يَكُن لَّهُۥ وَلِيّٞ مِّنَ ٱلذُّلِّۖ وَكَبِّرۡهُ تَكۡبِيرَۢا﴾

17:111. “(அன்றியும், (தனக்குச்) சந்ததியை எடுத்துக் கொள்ளாதவனும், (தன்) ஆட்சியில் தனக்குக் கூட்டாளி எவரும் இல்லாதவனும், எந்தவித பலஹீனத்தை கொண்டும் எந்த உதவியாளனும் (தேவை) இல்லாமலும் இருக்கிறானே அந்த நாயனுக்கே புகழ் அனைத்தும்” என்று (நபியே!) நீர் கூறுவீராக; இன்னும் (அவனை) எப்பொழுதும் பெருமைப் படுத்த வேண்டிய முறையில் பெருமைப் படுத்துவீராக) என அல்லாஹ் கூறுகின்றான்.

வானங்களிலும் பூமியிலும் இருக்கக்கூடியவர்களது வணக்கங்களின் நோக்கமே அவனை கண்ணியப்படுத்திப் பெருமைப்படுத்துவதே; அதனால் தான், தக்பீர் சொல்வது பெரிய வணக்கங்களின் அடையாளமாக இருந்தது, தொழுகையில் தக்பீர் சொல்வது அல்லாஹ்வின் பெருமைக்கும் மகிமைக்கும் மத்தியில் உடைந்து தாழ்ந்து செல்வதாகும். அதான் கூறியதிலிருந்து, ஐந்து நேரத் தொழுகைகள் மற்றும் அதற்கு முன் பின் தொழப்படக்கூடிய தொழுகைகளில் ஓதப்படக்கூடிய திக்ர்களில் (அல்லாஹு அக்பர்) என்ற வார்த்தை 375 முறை இடம்பெறுகின்றது. "(அல்லாஹு அக்பர்) என்ற வார்த்தையில் அல்லாஹ்வின் மகிமை உறுதிப்படுத்தப்படுகின்றது, பெருமையும், மகிமையையும் உள்ளடக்குகின்றது, ஆனாலும் பெருமை தான் மிகப் பரிபூரணமானது" என ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்.

ஹஜ், மார்க்கத்தின் பிரதான கடமைகளில் ஒன்று, ஜெம்ராக்களில் கல்லெரியும் போதும், சபா மர்வா போன்ற மலைகளிலும் (அல்லாஹு அக்பர்) என்று கூறி, அல்லாஹ்வை கண்ணியப்படுத்தி, ஏகத்துவப்படுத்துவது அதன் அடையாளமாகும். துல்ஹஜ் மாதத்தின் முதல் பத்து நாட்களே அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்த நாட்கள், அந்நாட்களில் செய்யப்படக்கூடிய அமல்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரியாமல் அமல்: தக்பீர் கூறுவதாகும்: "(துல்ஹஜ்) மாதத்தின் இந்தப் பத்து நாட்களே

அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்த நாட்கள், அவற்றில் செய்யப்படும் கிரிகைகளே அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரியவை; ஆகவே அந்நாட்களில் :(லா இலாஹ இல்லல்லாஹ், அல்லாஹுஅக்பர், அல்ஹம்துலில்லாஹ்) ஆகிய திக்ருகளை அதிகப்படுத்துங்கள்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

நல்ல சந்தோஷமான செய்திகளை கேட்கின்ற போதும், இது பெருநாள் தினங்களைப் போன்ற குதூகலமான சந்தர்ப்பங்களிலும் தக்பீர் கூறுவது சுன்னத்தாகும்: ஒருமுறை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்: "சொர்க்கத்தில் பாதிப்பேர் நீங்களாக இருப்பீர்கள் என நான் ஆதரவு வைக்கின்றேன்" எனக் கூறிய போது: "நாங்கள் அல்லாஹு அக்பர் என தக்பீர் கூறினோம்" என அபூ ஸஃஈத் அல்ஹுத்ரி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள் (புஹாரி), கிரகணங்களைப் போன்ற அல்லாஹ்வின் அத்தாட்சிகள் வெளிப்படும் போதும், பயங்கரமான ஆச்சரியமான சந்தர்ப்பங்களின் போதும் தக்பீர் கூறி அல்லாஹ் மகிமைப்படுத்தப்பட வேண்டும், ஒருமுறை சிலர், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம், பரக்கத் தேடுவதற்காக அவர்களுக்கும் ஒரு மரத்தைக் குறிக்கும்படி படி கேட்டார்கள், "அல்லாஹு அக்பர், இது பனு இஸ்ரவேலர்கள் கேட்டதைப் போன்றுள்ளது, (அவர்களுக்குப் பல கடவுள்கள் உள்ளதை போன்று, எங்களுக்கும் கடவுள்களை ஏற்படுத்துங்கள்) என்று அவர்கள் கேட்டார்கள்" என்ன நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (நஸாஇ)

பிரயானங்கள் மேற்கொள்கின்றபோது சில வேலை கவலைகள் பயம் போன்றன ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன; அப்பொழுது தக்பீர் சொல்லி அல்லாஹ்வே மேன்மைப்படுத்துகின்ற போது ஒருவகை அமைதி ஏற்படுவதை உணரலாம், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிரயாண நோக்குடன் கழுதையின் மீது ஏறினால், மூன்று முறை தக்பீர் சொல்லக் கூடியவர்களாக இருந்தார்கள் (முஸ்லிம்)

உயரமான இடங்களை போன்று கண்களை ஈர்க்கக்கூடிய காட்சிகளை காணும் போதும் தக்பீர் கூறுவது வேண்டப்பட்ட விடயமாகும்: "நாங்கள் உயரமான இடங்களுக்கு ஏறும் போது தக்பீர் கூறக் கூடியவர்களாக இருந்தோம்" என்ன ஜாபிர் (ரழியல்லாஹு அன்ஹு)

அவர்கள் கூறினார்கள். (புஹாரி) முஸ்லிம்கள் அவர்களது நாளாந்த வாழ்வையும் தக்பீருடனையே முடிப்பார்கள்: அவர்கள் நித்திரைக்காக தயாரானால், சுபஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ் என 33 தடவைகளும், அல்லாஹுஅக்பர் என 34 தடவைகளும் கூறுவார்கள்.

பெரிய இடங்களிலும், மகத்தான சந்தர்ப்பங்களிலும் தக்பீர் கூறுவது வேண்டப்பட்ட விடயமாகும், எமக்கு நேர்வழி கிடைத்திருப்பது நன்றி செலுத்தப்பட வேண்டிய ஓர் அருளாகும், அல்லாஹ் திருப்தி அடைந்து விரும்பக்கூடிய விடயங்களின் பால் நேர்வழி காட்டியமைக்காக அல்லாஹ்வை மேன்மைப்படுத்தி தக்பீர் கூறுவது அதற்கான நன்றியாகும்.

﴿لَن يَنَالَ ٱللَّهَ لُحُومُهَا وَلَا دِمَآؤُهَا وَلَٰكِن يَنَالُهُ ٱلتَّقْوَىٰ مِنكُمْۚ
كَذَٰلِكَ سَخَّرَهَا لَكُمْ لِتُكَبِّرُواْ ٱللَّهَ عَلَىٰ مَا هَدَىٰكُمْۗ﴾

22:37. (எனினும்), குர்பானியின் மாமிசங்களோ, அவற்றின் உதிரங்களோ அல்லாஹ்வை ஒரு போதும் அடைவதில்லை; ஆனால் உங்களுடைய தக்வா (பயபக்தி) தான் அவனை அடையும்; அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காண்பித்ததற்காக அவனை நீங்கள் பெருமைப் படுத்தும் பொருட்டு - இவ்வாறாக அவற்றை உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான்) என அல்லாஹ் கூறுகின்றான். வணக்கங்களை நிறைவேற்றி, நேர்வழியில் நிலைத்து நின்று, அல்லாஹ்வை மேன்மைப்படுத்துவது அதற்கான நன்றியாகும்.

﴿وَلِتُكْمِلُواْ ٱلْعِدَّةَ وَلِتُكَبِّرُواْ ٱللَّهَ عَلَىٰ مَا هَدَىٰكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ﴾

2:185. குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்). என அல்லாஹ் கூறுகின்றான். "வெற்றி, ரிஸ்க், மற்றும் நேர் வழி போன்ற விடயங்களுக்காகத் தக்பீர் கூறுவது வேண்டப்பட்டுள்ளது; ஏனெனில் இவை ஒரு மனிதன் வேண்டக்கூடிய மிகப்பெரும் மூன்று அம்சங்களாகும், அவனது அனைத்து நலவுகளும்

அவற்றிலேயே இருக்கின்றனர்" என ஷைஹுல் இஸ்லாம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹ், (அல்லாஹு அக்பர்) என்ற வார்த்தையை, மனிதர்களின் உள்ளங்களில் அவனது பெருமையை ஆட்கொள்ள வைக்கவே கூறும்படி ஏவியுள்ளான்,

﴿وَرَبَّكَ فَكَبِّرْ﴾

74:3. (மேலும், உம் இறைவனைப் பெருமைப் படுத்துவீராக.) என அல்லாஹ் கூறுகின்றான். அதை அல்லாஹ், மனிதர்கள் இயல்பாகப் பாவிக்க கூடிய ஒரு வார்த்தையாகவும் ஆக்கியிருக்கின்றான், ஒரு முறை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், ஒரு மனிதர்: "அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்" என்று கூறுவதை கேட்டுவிட்டு: "அவர் இயல்பு நிலையில் இருக்கின்றார்" என்று கூறினார்கள். (முஸ்லிம்).

அவ்வார்த்தையைக் கூறுவதற்கு மிகப் பெரும் நன்மை உண்டு, அதன் மூலம் உயர்ந்த அந்தஸ்துக்களைப் பெறலாம், அது அல்லாஹ் விரும்பக் கூடிய ஒரு வார்த்தையாகும்: "அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்திற்குரிய வார்த்தைகள் நான்கு, அவையாவன: சுபஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், லா இலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்), அத்துடன் அது, அதை மொழிகின்றவர்களுக்கான தர்மமாகவும் நன்மைகளாகவும் அமைகின்றன: "ஒவ்வொரு தக்பீரும் சதக்காவாகும்" என்ன நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்), சுபஹானல்லாஹ், அல்லாஹு அக்பர் போன்ற வார்த்தைகள் கூறப்படுகின்ற நிகழ்வுகளில், வானவர்கள், அவர்களின் இறக்கைகளை வானத்தின்பால் உயர்த்தி சூழ்ந்து கொள்கின்றனர். (புஹாரி, முஸ்லிம்). அல்லாஹு அக்பர், அல்ஹம்துலில்லாஹ் மற்றும் சுப்ஹானல்லாஹ் போன்ற வார்த்தைகளை கூறுவதன் மூலமாக வானத்தின் வாயல்கள் திறக்கப்படுகின்றன: "நாம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் தொழுது கொண்டிருந்தபோது, ஒருவர்:

الله أكبر كبيرا، والحمد لله كثيرا، وسبحان الله بكرة وأصيلا

(அல்லாஹு அக்பர் கபீரா, அல்ஹம்துலில்லாஹி கஸீரா, வஸுப்ஹானல்லாஹி புக்ரதன் வஃஅஸீலா) என்று கூறவே: "இவ்வார்த்தைகளை யார் கூறியது?" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கேட்டார்கள், அதற்கு ஒரு மனிதர்: "அல்லாஹ்வின் தூதரே, நான் தான் என்று கூறினார், அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்: "நான் ஆச்சரியமடைந்தேன், அதன் மூலமாக சொர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்பட்டன" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (முஸ்லிம்). அது, மறுமை நாளில், மீஸானில் பாரமானதாகக் காணப்படும்: "ஐந்து விடயங்கள் மிக நன்மை பயக்கக் கூடியவை, இன்னும் அவை மீஸானில் மிக பாரமானவை:

لا إله إلا الله، والله أكبر، وسبحان الله والحمد لله

பெற்றோர் நன்மையை எதிர்பார்க்கக்கூடிய சாலிஹான குழந்தையின் மரணம்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (அஹமத்)

முஸ்லிம்களே,

அல்லாஹ் மிகப்பெரியவன் அவனை விட பெரியவன் வேறு யாருமில்லை, வானங்களிலும் பூமியிலும் அனைத்து பெருமையும் அவனுக்கே உரியது, மனித சிந்தனைக்கும் புத்திக்கும் அல்லாஹ்வின் பெருமையை யதார்த்தத்தை அறிந்து கொள்வதற்கோ, அதைக் கற்பனை செய்யவோ, அதன் மாதிரியை அறியவும் சக்தி இல்லை, மனித உள்ளத்தில் தோன்றுகின்ற அனைத்தையும் விடவும் அல்லாஹ் பெரியவன்: "அல்லா அவனது ஒரு விரலில் வானங்களையும், இன்னொருவிரலில் பூமிகளையும், இன்னொரு விரலில் மரங்களையும், இன்னொரு விரலில் நீரையும் நிலத்தையும், இன்னொரு விரலில் ஏனைய அனைத்து படைப்பினங்களையும் வைப்பான்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (புஹாரி, முஸ்லிம்), விசுவாசி அவனது மிகப்பெரிய இறைவனிடம் பாதுகாப்புத் தேடுவான், அவன் மீது நம்பிக்கை வைப்பான், அவனிடமே, அவனது சகல விடயங்களையும் பொறுப்புச்சாற்றுவான், அவனை மாத்திரமே அழைத்து, அவன் மீதே தங்கினிப்பான்.

أعوذ بالله من الشيطان الرجيم

﴿وَمَا قَدَرُواْ ٱللَّهَ حَقَّ قَدۡرِهِۦ وَٱلۡأَرۡضُ جَمِيعٗا قَبۡضَتُهُۥ يَوۡمَ ٱلۡقِيَٰمَةِ وَٱلسَّمَٰوَٰتُ مَطۡوِيَّٰتُۢ بِيَمِينِهِۦۚ سُبۡحَٰنَهُۥ وَتَعَٰلَىٰ عَمَّا يُشۡرِكُونَ﴾

39:67. (அல்லாஹ்வின் கண்ணியத்திற்குத் தக்கவாறு அவர்கள் அவனை கண்ணியப்படுத்த வில்லை; இன்னும் இந்தப்பூமி முழுதும் கியாம நாளில் அவனுடைய ஒரு பிடிதான்; மேலும், வானங்களனைத்தும் அவனுடைய வலக்கையால் சுருட்டப்பட்டதாக இருக்கும்; அவர்கள் இணைவைப்பதை விட்டும் அவன் மகா தூயவன்.) என அல்லாஹ் கூறுகின்றான்.

## இரண்டாவது உரை

الحمد لله على إحسانه، والشكر له على توفيقه وامتنانه، وأشهد أن لا إله إلا الله وحده لا شريك له تعظيما لشأنه، وأشهد أن نبينا محمداً عبده ورسوله، صلى الله عليه وعلى آله وأصحابه وسلم تسليماً مزيداً.

முஸ்லிம்களே,

அடியார்களின் மகிழ்ச்சியும் அவர்களின் நலனும் அவர்களின் இன்பமும் அவர்களது இறைவனை அறிவதில்லையே இருக்கின்றது, அவன் மாத்திரமே அவர்களது வேண்டுதலாக இருக்க வேண்டும், அவனை அறிந்து கொள்வது அவர்களின் கண்குளிர்ச்சியாகம், அவனது பெருமை, இரட்சிப்பின் விசேட தன்மைகளில் ஒன்றாகும், அப்பண்பைத் தம் பண்பாக எடுத்துக்கொண்ட அடியார்களை அவன் எச்சரித்துள்ளான்: "கண்ணியம் அவனது சாரமாகும், பெருமை அவனது போர்வையாகும், யார், இதில் என்னுடன் முரண்படுகின்றாரோ நான் அவரை வேதனை செய்வேன்." என அல்லாஹ் கூறுவதாக, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்), "பெருமை, மிக மகத்தானதாகவும் விசாலமானதாகவும் இருப்பதனால், அது போர்வை என்ற வார்த்தைக்கு மிகத் தகுதியானதாக உள்ளது" என இப்னுல் கையிம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார், ஆகவே மனிதர்கள், பூமியில் பெருமையடித்து, அடுத்தவர்களை மிகைத்து, அவர்களுக்கு அநியாயம் செய்வதை தவிர்ந்து கொள்ளட்டும், யாருக்கு, சக்தி, அதிகாரம் வழங்கப்பட்டு, அது மனைவி போன்ற பலவீனமானவர்களை அநியாயம் செய்யத் தூண்டினால் - அல்லாஹ் அவனைவிட சக்தியிலும் அடக்குவதிலும் பெரியவன் என்பதை நினைவில் கொள்ளட்டும்.

﴿فَإِنْ أَطَعْنَكُمْ فَلَا تَبْغُوا۟ عَلَيْهِنَّ سَبِيلًا ۗ إِنَّ ٱللَّهَ كَانَ عَلِيًّا كَبِيرًا﴾

4:34.. (அவர்கள் உங்களுக்கு வழிப்பட்டுவிட்டால், அவர்களுக்கு எதிராக எந்த வழியையும் தேடாதீர்கள் - நிச்சயமாக அல்லாஹ் மிக

உயர்ந்தவனாகவும், வல்லமை உடையவனாகவும் இருக்கின்றான்.) என அல்லாஹ் கூறுகின்றான்.

ஒருவர், அல்லாஹ் பெரியவன் என்பதை உறுதியாக அறிந்தால், அவருக்கு அவன் மீதுள்ள பயம் அதிகரிக்கும், இன்னும் அவனை மகிமைப்படுத்தி விரும்பி, அவனை நல்ல முறையில் வழிபடுவான், அவனது உள்ளத்தில் தற்பெருமை பெருமை மற்றும் முகஸ்துதி போன்றவை இருக்காது, அல்லாஹ் சுவனத்தை, அவனது பணிவான விசுவாசிகளுக்கு ஏற்படுத்தி வைத்துள்ளார்:

﴿تِلْكَ ٱلدَّارُ ٱلْـَٔاخِرَةُ نَجْعَلُهَا لِلَّذِينَ لَا يُرِيدُونَ عُلُوًّا فِى ٱلْأَرْضِ وَلَا فَسَادًا ۚ وَٱلْعَـٰقِبَةُ لِلْمُتَّقِينَ﴾

28:83. (அந்த மறுமையின் வீட்டை, இப்பூமியில் (தங்களைப்) பெருமைப்படுத்திக் கொள்ளவும், குழப்பத்தை உண்டாக்கவும் விரும்பாதிருப்பவர்களுக்கே நாம் சொந்தமாக்கி வைப்போம்; ஏனெனில், பயபக்தியுடையவர்களுக்கே (மேலான) முடிவு உண்டு) என அல்லாஹ் கூறுகின்றான்.

## خطبة الجمعة

١٢/٤/١٤٤٥هـ — 2023/10/27 م

لفضيلة الشيخ الدكتور :


د. عبد المحسن بن محمد القاسم

إمام وخطيب المسجد النبوي الشريف


بعنـــوان

# التَكبِيْر



مترجمـة باللغـة التامليــة

a-alqasim.com